முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 335/2016

தேதி : 16-09-2025

(பி.வா.சா.3) – திரு.நாகராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1, 4 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>1, 4 முதல் 6ம் பிரதிவாதிகள் தரப்பில்குறுக்கு விசாரணை :</u>

1. நான், ஜெயபால், மணிகண்டன் ஆகியோர் மாரியம்மாளுக்கு பிறந்த பிள்ளைகள் என்றால் சரிதான். ஜெயபாலின் மனைவி தான் 1ம் வாதி கலையரசி என்றல் சரிதான். அவர்களின் பிள்ளைகள் தான் 2, 3ம் வாதிகள் என்றால் சரிதான். ஜெயபாலின் வாரிசுகள் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. 1 மற்றும் 4ம் வாதிகள் சேர்ந்து 2ம் பிரதிவாதிக்கு ரூ.50 ஆயிரத்திற்கு தாவா 2ம் லக்க சொத்தை அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின்படி 2ம் வாதிக்கும் 2லக்க சொத்தில் பாகம் உள்ளதா அல்லது இல்லையா என்றால் உள்ளது. மேற்படி அடமான ஆவணத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரிதான், ஆனால் சொத்தை நான் அனுபவித்து வருவதால் சாட்சியம் அளிக்கிறேன். அந்த அடமானத்திற்கும் எனக்கும் சம்பந்தமில்லாத நிலையில் எதற்காக மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அ.வ.எண். 88/2024 வழக்கில் என்னை தரப்பினராக சேர்த்துள்ளார்கள் என்றால் வழக்கு சொத்தில் எனக்கு பாகம் உள்ளதால் சேர்த்துள்ளார்கள்.

2. மாரியம்மாள் கடைசியாக 11.06.2015ல் எழுதிவைத்த உயில் ஆவணத்தின்படி 1, 2ம் பிரதிவாதிகளுக்கு தான் வழக்கு சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல, 2014ல் எழுதிய உயிலை என் தாயார் ரத்துசெய்துவிட்டு, 2015ம் ஆண்டு கடைசியாக ஜெயபாலன், ராஜேந்திரன், மணிகண்டன் மற்றும் எனக்கும் ஒரு உயில் எழுதி வைத்தார்கள். மாரியம்மாள் கடைசியாக 11.06.2015ல் எழுதிவைத்த மேற்படி உயிலை மறுத்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 2015ம் ஆண்டு உயிலிற்கு பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி மாரியம்மாள் கடைசியாக எழுதிவைத்த உயிலின் அடிப்படையில் 1, 2

பிரதிவாதிகள் தாவா சொத்தை அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், ஆனால் அதற்கு மாறாக ஒரு போலி யான அடமான ஆவணத்தை வாதிகள் உற்பத்தி செய்து மேற்படி அ.வ.எண்.88/2024 வழக்கை நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல, 1, 2ம் பிரதிவாதிகள் என் தாயார் ஹோமா நிலையில் உள்ள போது அழைத்து சென்று உற்பத்தி செய்ததாக என் தாய்மாமா சொல்லி கேள்விப்பட்டேன். நான் வாதிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.